# அலகு – 5

## படைப்பாற்றல்

**கவிதைப்படைப்பு** என்பது ஒருவருடைய சுயமான கற்பனை என்றே கூறலாம் .ஏன்னென்றால் படைப்பு ஒருவர் பார்ப்பது கேட்பது சுற்றி இருக்கும் சுழல் இயற்கை எல்லாவற்றையும் தனக்குள் கொண்டு ஒரு உரு கொடுப்பதே கவிதை. இக்கவிதையை மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று பிரிக்கலாம். இலக்கணம் பொருந்த வருவது மரபு, மிகவும் எளிமையாக புரிவது புதுக்கவிதை.

**சுயசிந்தனைக் கட்டுரைகள்** மாணவர்கள் தாங்களாகவே கொடுக்கின்ற தலைப்புக்கு ஏற்ப உட்தலைப்புகள் இட்டு எழுத வேண்டும்.அறிவியல்,சமூகம்,என்று பல தலைப்புக்களில் கொடுக்கப்படும் அதற்கு ஏற்ப எழுத வேண்டும்,

**விமர்சனம்** என்ற சொல்லுக்குப் பொருள் மதிப்பீடு என்பதாகும்."ஒருவரின் நல்ல அம்சங்களையும் குறைகளையும் ஆராய்ந்து வழங்கும் மதிப்பீடு என்கிறது அகராதி. ஆங்கிலத்தில்"criticium" எனப்படுகிறது.

நூல் அல்லது திரைப்படம் விமர்சனம் எனும் போது அதன் நிறை குறைகளை எடுத்து சொல்லுவதாகும்.ஒரு நூலை விமர்சனம் செய்யும் போது நூலின் தலைப்பு,அட்டைப்படம்,உள்ளடக்கம்,மொழிநடை,காலம்,சமுதாயச் சிந்தனை போன்ற இவை அனைத்தும் நூலசிரியரால் எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. என்பதை ஆய்வு செய்வதாகும்.

திரைப்பட விமர்சனம் என்பது கதை- பொருத்தம்- நடிப்பு-கதைக்களம்- கதையின் மையம் இவை அனைத்தும் பொருந்த விமர்சிக்க வேண்டும்.

கவிதை விமர்சிக்கும் போது கவிதை மரபுக் கவிதையா - புதுக்கவிதையா என்றும் -அணி நயம்,தலைப்பு,கருத்து பொருந்துவது. உட்கருத்து அதாவது

படிமம்,தொன்மம்,குறியீடு, போன்றவை அறிதல்.பிறமொழிக் கலப்பு இல்லாமல் இருக்கின்றதா என்பதை ஆய்தல். இவற்றை மனதிற் விமர்சித்தல் வேண்டும்.




செல்ஃபிபுள்ள" கவிதைநூல் விமர்சனம்

## மஹாத்மா காந்தியின் போதனைகள்

**நூல்:** மஹாத்மா காந்தியின் போதனைகள்

**ஆசிரியர்:** தொகுப்பாசிரியர்: யு.எஸ். மோஹன் ராவ்

**விலை:** ரூபாய் 125/-

**வெளியீடு:**சாந்தா பதிப்பகம்

**புத்தக மதிப்புரை:**

உலகம் போற்றும் உத்தமத் தலைவர்களின் வரிசையில் முதலில் வைத்து பாராட்டுபடுபவர் மஹாத்மா காந்தி. அவரது எண்ணற்ற உரைகள் மற்றும் கட்டுரைகளிலிருது எடுக்கப்பட்ட முத்து முத்தான கருத்துக்கள், இந்நூலில் எளிய தமிழாக்கத்தில் தொகுப்பட்டுள்ளன.

படைப்பில் “முழுமை” இரு வகைகளில் சாத்தியமாகிறது. ஒன்று அனுபவத்தை கூறுகளாகக் கண்டு, அக்கூறுகளில் ஒன்றில் சாராம்சத்தை, முழுமையை, குறிப்பால் உணர்த்துவதாக மாற்றுவது. இதையே கவிதைகள். காவியங்கள் நக்கலாகச் செய்கின்றன.

சிறுகதைகளில் தளமும் இதுவே. இன்னொன்று, அனுபவங்கள் அனைத்தையும் தொகுத்து வகைப்படுத்தி முழுமையை உண்டு பண்ண முயல்வது. இரண்டாம் வகைச் செயல்பாடுகள் தான் நாவலுக்கு உரியது என்று ருஷ்ய பேரிலக்கியங்கள் நிறுவுகின்றன என்பார் எழுத்தாளர் ஜெயமோகன்.

அனுபவம் அதிகமாக அதிகமாக பக்குவமாகிப் படித்த வாழ்க்கைப் போக்கை ஏதோவொரு வகையில், பிறரிடம் பகிர்ந்துக் கொள்ள எத்தனிப்பது உலக இயல்பு. அதுவே, மாபெரும் இலக்கியப் பதிவுகளாக இதுகாறும் கண்டிருக்கின்றோம். ஆதிகால இலக்கியம் முதல் இன்று வரை இதுவே நிகழ்கின்றது. உலகின் அனைத்து நிகழ்வுகளும், ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாடத்தைக் கற்றுத் தந்திருக்கின்றன.

மேலே செல்ல

இன்றைய சமூகம், கொஞ்சமும் ... , சகிக்க முடியாத அனுபவங்களைத

தருகின்றவைகளாகவே கூடுமானவரை மாறிப் போய் இருக்கிறன. லஞ்சம், வாவண்யம், குடி, பொய், பித்தலாட்டம், களவு, கற்பழிப்பு, சாதிய ஏற்றதாழ்வு, மதக்காழ்ப்பு இவற்றைக் கண்டு முகச் சுழிப்போடு இதோடு பயணம் செய்கிறவர்களாக அதிகப் பேர் இருக்கின்றனர்.

அவ்வகையில், தம் வாழ்வில் அடைந்த சமூகச் சிக்கல்களை மனக் குமுறலாக வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர். க.வீரமணி அவர்கள். அதற்கான வடிவமாக அவர் கவிதையை எடுத்துக் கொண்டுள்ளார். அதுவும் நக்கல் நிறைந்த கவிதைகளாக...

‘செல்ஃபிபுள்ள’ எனும் கவிதைத் தொகுப்பு தற்பொழுது அவரின் முதல் கவிதை நூலாக வெளி வந்திருக்கிறது. சமூகச் சாடல்கள் காரசாரமாகப் பரிமாறப் பெற்றுள்ளன. கொஞ்சம் கூடப் பாராபட்சம் இல்லாமல் தவறுகளை இனம் காட்டி, வெறுப்புக்களையும், கடும் கோபத்தினையும் பதிவு செய்துள்ளார்.

மிகக் குறைந்த அளவில், மனம் சார்ந்த உள்வெளி வெளிப்பாடுகளையும், காதல் உணர்வுகளையும் கூறும் ஆசிரியர், பெரும்பான்மையாக, மக்களின் இயலாமை, கொடுமைகள், மனச்சோர்வு, திண்டாட்டம், வயிற்றெரிச்சல், பிரச்சனைகள் அப்படியே அனல் தெறிக்கும் வ வெளிப்படுத்தி…

மேலே செல்ல

# திரைப்பட விமர்சனம் : உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

| | | |
|---|---|---|
| **வெளியான ஆண்டு** | : | 1998 |
| **நடிகர்கள்** | : | **கார்த்திக், ரோஜா, ரமேஷ் கண்ணா** |
| **இயக்கம்** | : | **விக்ரமன்** |
| **தயாரிப்பு** | : | **லட்சுமி மூவி மேக்கர்ஸ்** |

தான் இயக்கிய, *நான் பேச நினைப்பதெல்லாம்* படத்தையே, கொஞ்சம் மாற்றி அமைத்து, விக்ரமன் இயக்கிய படம் தான், ***உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்.***

சென்டிமென்ட், காமெடி, பாடல்கள் என, சரி விகித கலவை இருந்ததால், இப்படம், 'சில்வர் ஜூப்ளி' கொண்டாடியது.

இப்படம் உருவாக துவங்கியதில் இருந்து, பல்வேறு பிரச்னைகள் எழுந்தன. உறுதியாக நின்று வெற்றி பெற்றார், விக்ரமன்.

திருடனான கார்த்திக், தன்னால் பாதிக்கப் பட்ட ரோஜாவிற்கு அடைக்கலம் தந்து, அவரின் பாடகி கனவு நிறைவேற உதவுகிறார். ரோஜா, முன்னணி பாடகியான பின், கார்த்திக்கை ஏற்றுக்கொண்டாரா என்பது தான், படத்தின் நெகிழ்ச்சியான கிளைமேக்ஸ்.

இப்படத்தில், விஜய் மற்றும் மீனா நடிக்க இருந்தனர். ஆனால், சந்தர்ப்ப சூழலால் கார்த்திக்கும், ரோஜாவும் நடித்தனர்.

***உள்ளத்தை அள்ளித்தா, பூவரசன், உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்*** இதில் எது, நடிகர் கார்த்திக்கின், 100வது படம் என தெரிய வில்லை.

இப்படத்தில், கவுரவ வேடத்தில், அஜித் நடித்தார். அதற்கு பிரதிபலனாக, அஜித் நடித்த, ***ஆனந்த பூங்காற்று*** படத்தில், கார்த்திக் கவுரவ வேடத்தில் நடித்தார்

எஸ்.ஏ.ராஜ்குமார் இமையில், 'ஏதோ ஒரு பாட்டு, காற்றுக்கு தூதுவிட்டு, மல்லிகை பூவே, தொட்டபெட்டா குளிரு, வானம்பாடி யென்...' பாடல்கள், தமிழகம் எங்கும் காற்றில் தவழ்ந்தன.

படத்தின் மாபெரும் வெற்றிக்கு, தேனான பாடல்களும் முக்கிய காரணம். இப்படம், தமிழக அரசின், ஐந்து விருதுகளை பெற்றது.

இப்படம் தெலுங்கு, கன்னடம், பெங்காலி மற்றும் ஒரியா மொழிகளில், 'ரீமேக்' செய்யப் பட்டது.

***உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்,*** மக்களின் மனதை அள்ளியது!

**வினாக்கள்**

1. வானவில் என்ற தலைப்பில் புதுக்கவிதை படைக்க.
2. இமைகள் என்ற தலைப்பில் கவிதை எழுதுக.
3. வறுமை குறித்து கவிதை எழுதுக.
4. தென்றல் பற்றி புதுக் கவிதை படைக்க
5. நிலவு, சூரியன், மேகம், கடல், எழுத்து போன்ற தலைப்புகளில் புதுக்கவிதையினை படைக்க.
6. புதுஉலகம் குறித்து கட்டுரை ஒன்றை வரைக
7. மனித உரிமை என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக
8. சுற்றுச்சூழல், பாலின் வேறுபாடு சமூகக் குற்றத்தடுப்பு சிறுவர் உழைப்பு போன்ற பல தலைப்புகளில் சிந்தனைக் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.
9. விமர்சனம் என்றால் என்ன?
10. ஏதாவது கவிதை ஒன்றினை விமர்சனம் செய்க
11. சமீபத்தில் நீங்கள் படித்த நூல் ஒன்றிணை விமர்சனம் செய்க
12. நீங்கள் பார்த்த திரைப்படம் ஒன்றினை விமர்சித்து எழுதுக.

**ஒவ்வொரு அலகிலும் நடத்தப்பட்ட பாடத்திட்டத்தின் பகுதிகள் PDFஇல் வழங்கப்பட்டுள்ளன ஒவ்வொரு அலகிற்கும் உரிய மாதிரி வினாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கான விடைகளை தயார் செய்து எழுத வேண்டும்.**